மக்களை பெரும் கவலையுடன் உள்ளனர்.

# கர்ப்பிணிகளுக்கு 'ஓஜாஸ்' ஆலோசனை

சென்னை, மே.2-

தாய்மை என்பது பெண்கள் கர்ப்பம் ஆன நிமிடத்திலேயே ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு தாயும் தன் கர்ப்பத்தில் உள்ள குழந்தையுடன் தனக்கே உரிய பாணியில் தன் உணர்வை வெளிப்படுத்துவாள்.

தாய்மையின் வடிவங்கள் இன்றைய காலக்கட்டத்தில் பல்வேறு ரூபங்களாக பெருகி உள்ளது. இளம் தாய், முதல்முறை தாய் ஆகுபவள், வேலைக்கு போகும் தாய், முதிர்ந்த தாய் என்று பல விதங்கள். இதில் நீங்கள் எந்த வகையான தாயோ, அதைப் பொறுத்து தாய்-சேய் உறவு வித்தியாசப்படுகிறது.

ஓஜாஸ் பவுண்டேஷனின் 'ஜனனி' திட்டம், இதைத்தான் வலியுறுத்து கிறது. இத்திட்டத்தில் எந்த வகையான தாய் என்பதை கர்ப்பிணிக்கு உணர வைத்து அதன் மூலம் அவரை சேயுடன் உறவை வலுப்படுத்தி, அவரின் கர்ப்பகாலத்தை ஒரு மகத்துவம் மிக்க காலமாக உருவாக்க உதவுகிறது.

அதுமட்டும் அல்லாது, கர்ப்பத்தை எப்படி கொண்டாட வேண்டும். அதன் மூலமாக குழந்தையின் வளர்ச்சிக்கு எப்படி தாயின் உணர்வுகள் பலன் அளிக்கும் என்பதையும் வலியுறுத்து கிறது ஜனனி திட்டம். ஒரு தாயின் மனோரீதியான மாற்றங்களை அவளுக்கு அறிய ஜனனி திட்டம் உதவுகிறது. இதைப்பற்றி மேலும் அறிய 044-28472655 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## பெயர் மாற்றம்